வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1243 /ஆ2/2023 . நாள் : 15.03.2023.

பொருள்: பள்ளிக் கல்வி – கல்விசாரா செயல்பாடுகள் – 2022–2023–ஆம் கல்வியாண்டில் சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் – பின்பற்றவேண்டிய வழிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/ /இ1/2022, நாள்.13.03.2023.

#######

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி ஒவ்வொரு மாதமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இம்மாதம் மார்ச் 14 முதல் 17 வரை " **101 சோத்தியங்கள்** " என்ற தமிழ் திரைப்படம் திரையிடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்படத்தின் சுருக்கம் இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த கட்டுரை, தேன்சிட்டு இதழிலும் வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலும் திரைப்படம் திரைப்படம் திரையிடல் நடவடிக்கைக்காக ஒரு ஆசிரயருக்கு பொறுப்பு அளிக்க வேண்டும். தலைமை ஆசிரியருடன் இணைந்து பொறுப்பு ஆசிரியரும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பார்வைக் கடித்ததின்படி செயல்படுமாறு அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பில் காணும் அறிவுரைகளை பின்பற்றி அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் சிறார் திரைப்படத்தை 6–ஆம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் பார்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) மற்றும் (தொடக்கக் கல்வி) இணைப்பில் காணும் கடிதத்தின்படி செயல்படுமாறு பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

15/3/23

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

இணைப்பு–
பார்வைக் கடித நகல்.

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர், வே.மா.
(இடைநிலை) மற்றும் (தொடக்கக் கல்வி)

நகல் 1. அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.
2. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,(ஒபக)வேலூர்–6, (தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)
3. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.த.//